(166)


கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம்
வடக்கு - கிழக்கு மாகாணம்
සමුපකාර සංවර්ධන දෙපාර්තමේන්තුව
උතුරු - නැගෙනහිර පළාත
DEPARTMENT OF CO-OPERATIVE DEVELOPMENT
NORTH - EAST PROVINCE

எனது இல. / මගේ අංකය / My No. } என் ஈ பி / சிஅ / ஜிஈஎன் / 02.
உமது இல. / ඔබේ අංකය / Your No. }

உட்துறைமுக வீதி,
ඇතුල් වරාය පාර,
Inner Harbour Road,
திருகோணமலை.
ත්‍රිකුණාමලය.
Trincomalee, Sri Lanka.


(11)

10.02. 2004.

சுற்றறிக்கை இல. 3/ 2004

சகல கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்கட்கும்.

## அசையும், அசையா ஆதன கொள்ளல், விற்றல், நன்கொடையாகப் பெறல் அல்லது வேறு வகையாகப் பெறல், குத்தகைக்கு கொடுத்தல் அல்லது கொடுத்து மாற்றுதல் அல்லது வேறு வகையில் கையாளல்

1972ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் கீழான 33ஆம் பிரிவின் கீழ் சங்க நிதியிலிருந்து ஆதனங்களைக் கொள்ளலும் இச் சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட விதி 48(1), (11) இல் விதிக்கப்பட்டவாறு பதிவாளரின் முன்னங்கீகாரம் பெறப்பட்டே மேற்கொள்ளப்படல் வேண்டும். ஆயினும், 1992ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க திருத்தச் சட்டத்தின் அத்தியாயம் XI(அ) அரச நிதியங்களுடன் தொழிற்படும் பதிவு செய்யப்பட்ட சங்கங்களுக்கு ஏற்புடைத்தான சிறப்பு ஏற்பாடு என்னும் தலைப்பில் 60 (அ) (1)ம் பிரிவு, உட்கிடையாக, பதிவாளரது முன்னனுமதி, இவ்விடயங்களிற்கு பெறப்படுதலை "அரசாங்கத்திடமிருந்து நிதி பெறுமிடத்து" எனும் நிபந்தனையாக மட்டுப்படுத்தப்படுகிறது. திருத்தச் சட்டத்தின் நோக்கம் "கூட்டுறவுச் சங்கங்களை கட்டுப்படுத்தும்" என்பதற்குப் பதிலாக, "கூட்டுறவுச் சங்கங்களை நிர்வகிப்பது" என்ற நெடுந்தலைப்பின் மாற்றத்தினால், பாராளுமன்றத்தின் நோக்கம், ஆதன கொள்வனவு விடயத்தில் இதுவரை கடைப் பிடிக்கப்பட்ட கொள்கையில் மறைபொருளாக தளர்வு இருப்பதாக தெளிவாகுகிறது. கூட்டுறவுச் சங்கங்கள் தமது குறிக்கோள்களை எய்துவதற்குப் பதிவாளரின் முன்னனுமதி நடைமுறை தடையாக அமைவது வரவேற்றகத்தக்கதொன்றல்ல.

எனவே, இவ்விடயத்தை விரைவுபடுத்துவதற்காக பிரிவுக் கூட்டுறவு ஆணையாளரிடமிருந்து எனது அனுமதிக்கு விண்ணப்பிக்கும் இவ்விடயம் தொடர்பான சகல விண்ணப்பங்களும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள செவ்வை நிரல் (Check List)பூர்த்தி செய்யப்பட்டு, விண்ணப்பத்தின் முகப்பில் உதவி ஆணையாளரால் அத்தாட்சிபடுத்தப்பட்டிருப்பின் மட்டுமே என்னால் ஏற்றுக் கொள்ளப்படும். இதற்கமைவாக இல்லாத விண்ணப்பங்கள் சம்பந்தப்பட்ட உதவி ஆணையாளருக்கு திருப்பி அனுப்புவதற்கு பணிப்பு வழங்கப்பட்டுள்ளது. சங்கங்களிலிருந்து பெறப்பட்ட விண்ணப்பங்கள் கிடைக்கப் பெற்று 10 வேலை நாட்களுக்குள் பூர்த்தி செய்யப்பட்டு, எனக்கு முன்னளிக்கப்படாவிட்டால், வலுவான காரணமின்றி இவ்விண்ணப்பங்கள் கூட்டுறவு உதவி ஆணையாளர் அலுவலகத்தில் தேங்கி இருப்பதற்கு எதிராக கூட்டுறவு உதவி ஆணையாளர் உள்ளிட்ட தொடர்புபட்ட அலுவலர்கள் யாவருக்கும் எதிராக நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இதைத் தவிர்ப்பதற்காக, செவ்வை நிரலிலுள்ள விடயங்கள் பூர்த்தி செய்யப்படாத சங்கங்களின் விண்ணப்பங்களை ஏற்காது திருப்பி அனுப்பி உரிய விபரங்களுடனும், இணைப்புக்களுடனும் முறையான விண்ணப்பங்கள் பெறப்படுதல் வேண்டும்.

இவ் அறிவுறுத்தல்களைச் சரிவர கடைப்பிடிப்பதன் மூலம் தங்கள் அலுவலகத்தினது பணிகளும், எனது அலுவலகத்தின் பணிகளும் சீரான முறைமை ஒன்றில் இயங்குவதற்கு இலகுவாக இருக்கும் என்பதைக் கவனத்தில் எடுக்கும்படியாக வலியுறுத்துகின்றேன்.

இவ்வறிக்கை கிடைத்தமையை உறுதிப்படுத்துக.

o/c

இ.இளங்கோவன்
கூ.அ.ஆணையாளரும்
கூ.ச.பதிவாளரும் (வகிமா)

jm/-cr.2.2004

165

(10)

**செவ்வை நிரல் :-**

1. கொள்வனவு / விற்பனை / வேறுவகையில் கையாளுவதற்கான சங்கத்தின் சுருக்க அறிக்கை ஆம்/இல்லை பக்……

2. கொள்வனவு / விற்பனை வேறுவகை கையாளலுக்கான பொதுச்சபைத் தீர்மானித்தின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதி ஆம்/இல்லை பக்……

3. கொள்வனவு அல்லது வேறுவகையில் ஆதனத்தைப் பெறுவதற்கான விண்ணப்பம் எனில் வரவுசெலவுத்திட்ட ஏற்பாடுள்ள வரவுசெலவுத்திட்டத்தின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதி ஆம்/இல்லை பக்……

4. இயக்குனர் சபையின் உறுதிப்படுத்தப்பட்ட தீர்மானப்பிரதி ஆம்/இல்லை பக்……

5. கொள்வனவு அல்லது நிர்மாணம் எனின் உத்தேசத்தொகை உறுதிப்படுத்தப்பட்ட மதிப்பீடு ஆம்/இல்லை பக்……

6. இயந்திரங்கள் உபகரணங்கள் அல்லது வாகனங்களாயின் அங்கீகரிக்கப்பட்ட முகவரிடமிருந்து அண்மையில் பெறப்பட்ட பட்டியல் (Catelog ஆம்/இல்லை பக்……

7. கொள்ளல் அல்லது வேறுவகைப் பெறுதலுக்கான விண்ணப்பம் எனின் நிதி பெறுவதற்கான வழிபற்றிய முன்மொழிவு ஆம்/இல்லை பக்……
   - அ. சொந்த நிதியை உறுதிசெய்யும் கூற்று ஆம்/இல்லை பக்……
   - ஆ. கடனாக அல்லது கொடையாகவெனில் மூலமும் திருப்பிச் செலுத்துகை பற்றிய ஏற்பாடுகளையும் கொண்ட கூற்று. ஆம்/இல்லை பக்……

8. உற்பத்தியில் ஈடுபடுத்தும் பொறித்தொகுதி இயந்திரங்கள் அல்லது நிர்மாணங்கள் எனில் சமஉடைவு (Breakeven) ஆய்வுடன் கூடிய இயலுமை ஆம்/இல்லை பக்……

9. வாகனங்கள் இயந்திரங்கள் விற்பனை எனில் அங்கீகரிக்கப்பட்ட பொறியியலாளரிடமிருந்து பெறப்பட்ட மதிப்பீட்டு கூற்றின் பிரதி. ஆம்/இல்லை பக்……

10. தொழிற்படு மூலதனமும் கழிவோட்ட காசுக்கூற்றையும் (Discounted cash flow) கொண்ட கணக்கீட்டுக் கூற்று ஆம்/இல்லை பக்……

11. காணிக்கொள்வனவு எனின் பட்டோலையும் (Encumbrance sheet) உத்தேச மதிப்பீடு ஆம்/இல்லை பக்……

12. விண்ணப்பம் செய்யும் திகதிக்கு உடன்முந்தியதாக மூன்றுமாத காலத்துள் கணக்காய்வு அறிக்கை இல்லாத விடத்து அத்தாட்சிப்படுத்திய மூலதனக்கூற்று ஆம்/இல்லை பக்……

13. இறுதியாக கணக்காய்விற்கு உட்படுத்தி பெறப்பட்ட திட்டக் கடதாசியின் உறுதிப்படுத்திய பிரதி.

ஆம்/இல்லைபக்……

(168)

(9)

14. மேற்காண் செவ்வை நிரல் என்னால் பரிசீலிக்கப்பட்டு இணைப்புகள் முறையாக உள்ளன எனவும் எனக்குச் சமர்ப்பிக்கப்பட்ட ஆதாரங்களின் அடிப்படையில் ஆதனகொள்வனவுக்கு அல்லது வேறுவகை கையாளலுக்கு அனுமதி வழங்கப்படலாமெனவும், பரிந்துரைக்கின்றேன்/ பரிந்துரைக்கவில்லை.

………………………………

கூ.ஆ.உ.ஆணையாளர்

jm/-